சைவசமய நோன்பு விளக்கம்

பிள்ளையார், முருகப்பெருமான்,
சிவபெருமான், பார்வதி தேவியார்,
சிவராத்திரி முதலிய
நோன்புகள்
அடங்கியன.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை - 1.

கழக வெளியீடு: எஉக

சைவசமய நோன்பு விளக்கம்

பிள்ளையார், முருகப்பெருமான், சிவபெருமான்,
பார்வதி தேவியார், சிவராத்திரி முதலிய
நோன்புகள்
அடங்கியன

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை-1.

வாக விளக்கப்பட்டுள்ளன. இந்நூல் காஞ்சி புரம் வித்துவான். சபாபதி முதலியார் அவர் களால் அச்சிட்ட படிகளுக்கிணங்க அமைக்கப் பெற்றதாகும்.

இந்நூலைக் கற்கும் மெய் அன்பர்கள் நோன்பு, விழா முதலியன எவ்வெக் காலங்களில் எவ்வெம்முறையால் நடத்தல்வேண்டும் என்பதும், அவ்வவற்றின் பயனும், காரணமும் தெளிவாக உணர்வார்கள். உணர்ந்து அவற்றின்படி நடந்து எல்லா வாழ்வும் எய்தி இன்புறுவார்களாக.

எல்லாரும் இன்புற்றிருக்க இந்நூலைப் பரப்ப முயற்சி செய்யுமாறு வேண்டுகின்றேம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

உள்ளுறை

உ

சைவசமய நோன்பு விளக்கம்

க. பிள்ளையார் நோன்பு

இது, வெள்ளிக்கிழமை; வளர்பிறை 4-ம் நாள்; இவைகளுமல்லாமல் மார்கழித்திங்கள் 6-ம் பிறை என மூன்று பிரிவுடையது.

வெள்ளிக்கிழமை நோன்பு கைக்கொள்ளும் முறைமை:

சித்திரைத் திங்கள் வளர்பிறை வெள்ளிக்கிழமை விடியற்காலம் ஆற்றில் நீராடி, அவ்வந்நாள் நடைமுறைகளை நிறைவேற்றிக்கொண்டு, முறைப்படி மண்டபத்தை அழகு படுத்தி, நெற் பரப்பிப் பொற்குடம் வைத்து, அதன்மேல் பொன்னினுலாவது, வெள்ளியினுலாவது செய்வித்த பிள்ளையார் வடிவத்தை வழிபட்டு, பழம், எள், பொரிகடலை, மொச்சை, கரும்பு, தேங்காய், விளாம்பழம், சர்க்கரை இவைகளைப் படைத்து (நிவேதித்து)த் தொழுது, வழுத்தி, சிவன்இரவில் சிவன் கோயிலிற் சென்று நூறுமுறை வலம்வந்து வணங்கி வழுத்தி, வீட்டில் வந்து பழம் முதலி யன தின்று பொழுதுவிடிந்த பின்பு, முன்வைத்த பொற் குடம் வடிவங்களைச் சைவ அந்தணர்களுக்குக் கொடுத்து விட்டுச் சிவனடியார்களுடன் இருந்து உணவு உட்கொளல் வேண்டும்.

சதுர்த்தி:

விநாயகர் சதுர்த்தி, சங்கட சதுர்த்தி, செவ்வாய்ச் சதுர்த்தி என மூன்று வகைப்படும்.

1. நான்காம் வளர்பிறை நோன்பு

மாசித் திங்கள் வளர்பிறை 4-ம் நாளில் பூமாலைகளா லும் மாணிக்கங்களாலும் மண்டபம் அழகுபடுத்தித் திரு

முழுக்கு முதலாகிய நீர் அணி விழவுக்குரிய பொருள்கள் சேர்த்துக்கொண்டு துப்புரவான இடத்தில் மென்மையான மண் எடுத்து அதில் வேர்கள், கறையான் முதலிய உயிர்ப் பொருள்கள், கற்கள் இக்குற்றங்கள் இல்லாமற் பார்த்து அதனைப் பிசைந்து சிற்ப நூலில் சொல்லியுள்ள முறைப்படி பிள்ளையாரின் திருவுருவம் சமைத்தல் வேண்டும்.

இதுவுமல்லாமல் பொன்னினால் ஒரு பிள்ளையார் வடிவம் அமைத்து அதன்பின்பு மேற்சொல்லிய மண்டபத்தில் நெல் பரப்பி அதில் பொற்கும்பம் வைத்து ஐந்து, ஆறு, எட்டு, பத்து, பன்னிரண்டு எழுத்து மந்திரங்கள் ஒரு இலட்சம் உச்சரிக்கவேண்டும்; அல்லது பதினாயிரமாவது செபிக்கவேண்டும். இருபத்தெட்டு எழுத்து மந்திரம் பதினாயிரம் செபிக்கவேண்டும் (உருவேற்றல்வேண்டும்). இப்படி உருவேற்றும்போது, பத்து உருவானவுடன் ஓர் மந்திரம் நிறைத்தல் வேண்டும். அஃதாவது நீர் இறைத்தல் (தருப்பணஞ் செய்தல்) வேண்டும். அப்படிப் பத்து நீர் இறைப்பு ஆனால், ஓர் ஓமம் செய்தல்வேண்டும். அப்படிப் பத்து ஓமம் செய்தானவுடனே, சைவ அந்தணர் ஒருவர்க்கு உணவுகொடுக்கவேண்டும். இந்த முறையாகப் பூசையைச் செய்து நிறைவேறும் காலத்தில் பொன் நிலம் முதலானவற்றைத் தானம் கொடுத்தல்வேண்டும்.

மாசித்திங்கள் வளர்பிறை நான்காம்நாள் முதல் பங்குனித் திங்கள் வளர்பிறை நான்காம்நாள் வரையில் நாள்தோறும் மேற்சொல்லிய முறைமைப்படி பூசைசெய்து மண்ணினால் செய்யப்பட்ட பிள்ளையார் உருவத்தைச் சிறப்புடன் எழுந்தருளப் பண்ணிக்கொண்டுபோய், மடுவிலாவது, தடாகத்திலாவது, ஆற்றிலாவது விட்டுவிடல் வேண்டும். பொன் முதலியவற்றால் செய்யப்பட்டவைகளை ஆசாரியார்க்குத் தானமாகக் கொடுத்தல்வேண்டும்.

இப்படி, 30 நாளும் பூசை செய்கிறவர்கள் உண்டி உறக்கமில்லாமல் பொறிபுலன்களை அடக்கி முப்பத்தொன்றும் நாள் சிவனடியார்கள், விருந்தாளிகள், உறவினர்கள்

இவர்களுடன் இருந்து உணவுகொள்ளல் வேண்டும். முப்பதுநாளும் உணவில்லாது இருக்கமாட்டாதவர்கள் உப்பின்றிச் சமைத்த பச்சரிசி உணவு, பழம், பால் இவைகளில் ஒன்றை உட்கொண்டு நோன்பு இருக்கலாம். முப்பது நாளும் நோன்பு இருக்கமுடியாதவர்கள் தொடங்கிய முதல் நாள் மட்டுமாவது மேற்சொன்ன முறைமைப்படி நோன்பிருத்தல் வேண்டும்.

2. சங்கட சதுர்த்தி நோன்பு

மாசித்திங்கள் தேய்பிறை செவ்வாய்க்கிழமை கூடிய நாளில் வருகிற சதுர்த்தி சங்கட சதுர்த்தியாம்.

நோன்பு இருக்கும் முறைமை ;

அன்று ஞாயிறு தோன்றுவதற்குமுன் எழுந்து நாட்கடன்களை முடித்துக்கொண்டு திருநீறு சிவமணி அணிந்தவராய்க் காம முதலாகிய குற்றங்களை ஒழித்துப் பிள்ளையாரின் திருவடிகளை உள்ளத்தில் நினைத்து, ஓரெழுத்து, ஆறெழுத்து, பெயர்மந்திரம் என்னும் மூன்று மந்திரத்தில் ஒரு மந்திரத்தை உருவேற்றி அன்று முழுவதும் உணவு கொள்ளாமல் இரவு மதி எழுகின்றபொழுது பிள்ளையார் வடிவைச் சிறப்பிடத்தில் எழுந்தருளப் பண்ணி மிகுந்த அன்புடன் நீராட்டல் முதலிய பொருள்களால் பூசனைசெய்து போற்றி அதன்பின்பு அந்தணர்க்கு உணவு அருத்தி அவ்விரவு முழுதும் தூங்காமல் பிள்ளையாரின் திருவரலாறுகளைக் கேட்டுக்கொண்டிருப்பதுவே சங்கட சதுர்த்தி நோன்பு கைக்கொள்ளும் முறைமையாம்.

3. செவ்வாய்ச் சதுர்த்தி நோன்பு

வளர்பிறைச் செவ்வாய்க்கிழமையில் வருகிற சதுர்த்தியே செவ்வாய்ச் சதுர்த்தி (அங்காரக சதுர்த்தி)ஆம். இந்நாளில் மதி தோன்றிய பின்பு பிள்ளையார் பூசைசெய்ய வேண்டும். செவ்வாய் என்னும் கோள் பூசித்தமையால் செவ்வாய்ச்சதுர்த்தி என்று சொல்லப்பட்டது. மார்

கழித்திங்கள் ஆறும்பிறை நாளிலும் இம்முறையாக நோன்பு இருந்தால் பிள்ளையார் அருள்கூர்ந்து வேண்டிய வரங்களைத் தந்தருள்வர்.

பிள்ளையார் நோன்பு முற்றிற்று

உ. முருகப்பெருமான் நோன்பு

ஐப்பசித் திங்கள் வளர்பிறை வெள்ளிக்கிழமை 6-ம் நாள், கார்த்திகைத்திங்கள் கார்த்திகைப் பெருநாள் என்னும் இந்நாட்களில் முருகப்பெருமான் நோன்பைக் கைக்கொள்ளவேண்டும். ஐப்பசித்திங்கள் வெள்ளிக்கிழமை சூரியன் தோன்றுங்காலத்தில் நீராடி முருகக் கடவுளை நினைந்து அன்றுடம் செய்யும் கருமங்களை (செயற்பாடுகளை) முடித்துக்கொண்டு நெல் பரப்பி அதன்மேல் கும்பம் வைத்து, மாஇலையைச் செருகி அதில் பொன்னிற் செய்யப்பட்ட முருகன் திருவுருவத்தை வைத்து மறை முறைப்படி பூசைசெய்து அன்றிரவு கோயிலுக்குச் சென்று கடவுளைக் கும்பிட்டுப் பழம் முதலியவற்றைத் தின்று மறுநாள் பொழுதுவிடிந்தபின் நீராடிக் கடவுளைப் பூசித்துக் கும்பத்தையும் பொன் உருவத்தையும் அந்தணர்க்குக் கொடுத்து உண்டியும் உதவிப் பின் ஒன்பது நாழிகைக்குள் சிவனடியார்களுடன் உணவு அருந்தல் வேண்டும்.

நாள் நோன்பு

சித்திரைத்திங்கள் முதல் பன்னிரண்டு திங்களிலும் வருகின்ற கார்த்திகை நாளிலும் இவ்வாறே நோன்பு மேற்கொள்ளவேண்டும். பன்னிரண்டு திங்களிலும் வருகிற இருபத்துநான்கு ஆறும்பிறை (சட்டி) நாட்களிலும் அவ்வாறே நோன்பைக் கைக்கொள்ளல் வேண்டும். இந்த நோன்புகளைக் கைக்கொண்டு தேவர் முதலானவர்கள் வேண்டிய வரங்கள் பெற்றுக்கொண்டார்கள்.

முருகப்பெருமான் நோன்பு முற்றிற்று.

ரு. சிவபெருமான் நோன்பு

இந்த நோன்பு திங்கட்கிழமை நோன்பு, திருவாதிரை நோன்பு, உமாமகேச்சுர நோன்பு, சிவராத்திரி நோன்பு, கேதாரேச்சுர நோன்பு, மாமண நோன்பு, காளைமாட்டு நோன்பு, முத்தலைவேல் நோன்பு என எட்டுவகைப்படும்.

1. திங்கட்கிழமை நோன்பு

இதனைக் கார்த்திகைத்திங்கள் முதல்திங்கட்கிழமை தொடங்கிக் கைக்கொள்ளல் வேண்டும்.

கைக்கோள்ளும் முறை :

செங்கதிரோன் தோன்றும் காலத்தில் எழுந்து நீராடல் முதலிய அவ்வவ் நாட்செயல்களை முடித்து அதற்குமேல் தன்பொருட்டுச் செய்யும் (உடையவர்) பூசையும் செய்து பின்பு அந்தணர் ஒருவரை அவர் மனைவியுடன் வருவித்து அவ்விருவரையும் சிவமும் பராசத்தியுமாகக் கருதி வழிபட்டு அரிசி முதலியவற்றைத் தன் செல்வத்துக்குத் தகுதியாகக் கொடுத்தனுப்பித் தான் ஒரு பொழுது உணவு உட்கொள்ளல் வேண்டும். அன்று பகல் முழுவதும் சிவனை நினைந்துகொண்டிருந்து இரவு உணவு உட்கொண்டால் மிகவும் நல்லது.

சிவபூசை செய்யாதவர்கள் மேற்சொல்லியபடி அந்தணர் பூசையும் செய்து சிவன்கோயிலிற் சென்று சிவபெருமானுக்கு முழுக்காட்டு முதலான பதினறுவகைச் சிறப்புகளுடன் வில்வ அருச்சனையும் செய்வித்துப் போற்றி அந்தணர் விருந்தும் அமைப்பித்து அன்று பட்டினியாய் இருந்தாலும் அல்லது பகற்பொழுதுமட்டும் பட்டினியாயிருந்தாலும் சிறப்பே. இவ்வாறு இந்த நோன்புகள் நோற்கின்றவர்கள் சிவன் உலகில் இருக்கும் பேறு உடையவர்கள் ஆவர்.

2. திருவாதிரை நோன்பு

மார்கழித்திங்கள் திருவாதிரைநாளில் பொழுது தோன்றுங் காலத்தில் தூக்கம்விட்டு எழுந்து சிவ நினைப்

புடன் சென்று தூயநீரில் ஆடி வலம் வந்து பரமசிவனை வணங்கிப் போற்றி விளக்குகள் ஏற்றித் திருமஞ்சனம் முதலான சிறப்புகள் நடப்பித்து, இவ்வாறு கூத்தப்பெருமானுக்கும் நடப்பித்துப் போற்றி, அன்று முழுவதும் பட்டினியாயிருந்து சிவபுராணம் கேட்டுக்கொண்டிருந்து பொழுது விடிந்தபின்பு நாட்கருமங்களை நிறைவேற்றிக் கொண்டு சிவவழிபாடு செய்து அந்தணர்க்குச் செய்யும் சிறப்பைச் செய்து சிவனடியார்களை வைத்துக்கொண்டு உணவு கொள்ளல்வேண்டும். இந்த நோன்பு திருத்தில்லையில் நடந்தால் பயன் ஒன்று கோடியாம்.

3. உமாமகேச்சுர நோன்பு

கார்த்திகைத் திங்கள் நிறைமதி நாளில் மேற்கூறியபடி நீராடல் முதலிய நாட்செயற்பாடுகளை முடித்துப் பொன்னினுல் உமாமகேச்சுர வடிவம் செய்வித்துக் கொண்டு நல்ல ஓர் இடத்தை ஆன் சாணத்தினுல் மெழுகித் தூய்மைசெய்து அவ்விடத்தில் பத்துப்படி நெல் பரப்பி அதன்மேல் கும்பம் வைத்து நீர்நிறைத்து மாவிலைவைத்து ஒரு துணியை நாலாகமடித்துக் கும்பத்தின்மேல் மாவிலைக்கு நடுவாக இருக்கும்படி வைத்துப் பொன்னினுல் செய்வித்திருக்கிற வடிவத்தை ஆனைந்தினுல் தூய்மைசெய்து தூபம் கொடுத்துக் கும்பத்தின்மேல் வைத்துச் சந்தனம் பூக்கள் திருமுடியிற் சாத்தி அன்புடன் பூசித்துப் படைப்புக்களும் படைப்பித்து மும்முறை வலம் வந்து எட்டுறுப்பும் தோய வணங்கிப் பாடிச் சிவன் கோயிலுக்குப்போய் அங்கும் அம்மை அப்பர்க்கு—மாதிருக்கும் பாதியர்க்கு நீராட்டு முதலானவை அன்புடன் நிறைவேற்றி வீட்டில் வந்து, ஒருபொழுதுணவு கொண்டு இரவு யாதாவது ஒரு பண்டம் உண்டு பொழுதுவிடிந்தபின்பு, முன்போல் நாட்செயற்பாடுகளை முடித்துக்கொண்டு முன்பு வைத்த உமாமகேச்சுரர்களைப் பூசித்து அந்த வடிவங்களை அந்தணர்கட்குக் கொடுத்துவிட்டுச் சிவனடியார்களுடன் உணவு அருந்தவேண்டும்.

4. சிவராத்திரி நோன்பு

மாசித்திங்கள் தேய்பிறை பதினான்காம் நாளில் பொழுது எழும்புங்காலத்தில், நாட்கருமங்களை முடித்துச் சிவசிந்தனையுடன் அன்று பகல் முழுவதும் பட்டினியிருந்து இரவு நான்கு யாமத்திலும் உறக்கமில்லாமல் சிவபூசை செய்தல்வேண்டும். சிவபூசை இல்லாதவர்கள் கோயிலுக்குச் சென்று பரமசிவத்துக்கு முழுக்காட்டு முதலாயின செய்வித்துச் சேவித்து மறுநாள் ஞாயிறு தோன்றியதும் நாட்கருமங்களை முடித்துக்கொண்டு சிவவழிபாடு செய்து பின் உணவுகொள்ளல் வேண்டும். சிவராத்திரிநாள் இரவு பதினான்கு நாழிகைக்குமேல் ஒன்றரைமணி வேளை (முழுத்தம்) (இலிங்கோற்பவகாலம்) இலிங்கத் தோற்றமாகும் காலம் என விதிக்கப்பட்டிருப்பதினால் அந்தக் காலத்தில் தவிராது சிவ வழிபாடு செய்யவேண்டும்.

சித்திரைத்திங்கள் முதல் பன்னிரண்டு மாதங்களிலும் வருகிற பிறைநாள் பதினான்கு இரண்டு வீதம் இருபத்துநான்கு நாளும், நாட்சிவராத்திரி நாட்கள் எனப்படும். தேய்பிறை பதினான்காம் நாள் பன்னிரண்டும் திங்கட் சிவராத்திரியாம். எந்த மாதத்திலாவது திங்கட்கிழமையும் அமாவாசையும் (இருள்நாள்) கூடுமானால் அது யோக சிவராத்திரி ஆம். தைத்திங்கள் தேய்பிறை முதல்நாள் முதல் பதின்மூன்று நாளும் ஒருவேளை உணவாக நோன்பு கைக்கொண்டிருந்து பதினான்காம் நாளில் மேற்சொல்லிய விதிப்படி நோன்பு மேற்கொள்வது பக்க சிவராத்திரியாம். மாசித்திங்கள் தேய்பிறை பதினான்காம் நாள் மகாசிவன் ராத்திரி. இவ்வாறு சிவராத்திரி ஐந்து வகைப்படும் என்று உபதேசகாண்டம் கூறுகின்றது.

நான்முகனுக்கு இறுதிக்காலமாகிய பிரளயத்தில் உயிர்கள் முழுவதும் ஒழிந்துபோன இரவுக்காலம் நான்கு யாமத்திலும் பார்வதி தேவியார் பரமசிவனைப் பூசித்து மறுபடி படைப்பைத் தொடங்கும் காலத்தில் பார்வதிதேவியார் பரமசிவத்தை நோக்கி நான் தேவரீரைப் பூசித்தமையால் இதற்குச் சிவராத்திரி என்றும் இந்தக்

காலத்தில் நோன்பிருந்து பூசிப்பவர்கள் இரண்டறக் கலக்கும் பேறுபெறவும் அருள்புரிய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

5. கேதாரேச்சுர நோன்பு

இந்த நோன்பு சிந்தியம் என்னும் ஆகமத்தில் விதிக்கப்பட்டுள்ளது. இது நான்கு பக்கமாகப் பண்ணல் வேண்டியது.

1. நான்கு பக்கமாகப் பண்ண வேண்டுவது முதன்மையானது.

2. புரட்டாசித் திங்கள் வளர்பிறை 8-ம் நாள்முதல் தேய்பிறை 14-ம் நாள் வரைக்கும் நாள் 21. இடைநிலையது.

3. புரட்டாசித் திங்கள் தேய்பிறை முதல்நாள் முதல் பதினான்காம்நாள் வரைக்கும் நாள் 14—கடைநிலையது.

4. புரட்டாசித் திங்கள் தேய்பிறை எட்டாம் நாள் முதல் பதினான்காம் நாள்வரைக்கும் நாள் ஏழு—கடையிற் கடைநிலை.

5. புரட்டாசித் திங்கள் தேய்பிறை 14-ம் நாள் 1. பொதுவான பக்கம்.

6. ஐப்பசித் திங்கள் தேய்பிறை 14-ம் நாளில் நடத்துவது தனிப்பக்கம் (கேவலப்பக்கம்).

இந்த நோன்பு முறையாக 21 நாள் பண்ணுகிறதானால் நாள் 1-க்கு பூ மந்திரம் முதலானவைகளை ஒவ்வொன்றாகப் பூசித்து இருபத்தொன்றும் நாளில் மணிச்சரம் (தோரம்) அணிந்துகொள்ள வேண்டியது. 14-ஆம் நாள் பண்ணுகிறதானால் நாள் 13-க்கு நாள் ஒன்றுக்கு மந்திரம் முதலானவைகள் ஒவ்வொன்று. மற்ற ஒரு நாளில் மந்திரம் முதலானவைகளை எட்டுமாகப் பூசித்து 14-ஆம் நாளில் மணிச்சரம் பூண்டுகொள்ள வேண்டியது. 7 நாள்

பண்ணுகிறதானல் நாள் ஒன்றுக்கு மந்திரம் முதலானவைகளை மூன்று விழுக்காடு பூசித்து ஏழாம் நாள் மணிச்சரம் பூணவேண்டியது. ஒரு நாளில் பண்ணுகிறதானல் மந்திரம் முதலானவைகளை அற்றைநாளே 21-ம் பூசித்து மணிச்சரம் அணிந்துகொள்ள வேண்டியது. மணிச்சரம் ஒளிமணி 21 முதன்மையானது. பொன்மணி 21 இடைநிலை. வெள்ளிமணி 21 கடைநிலை. வெண் பட்டிழை 21 கடையிற் கடைநிலை. இந்த மணிகளையும் இழைகளையும் கோத்தும் முடிந்தும் முடிவு நாளில் வலது கையில் அணிந்துகொள்ள வேண்டும். வெண் பட்டிழை அளவு நோன்பு இருக்கிறவருடைய கையளவு கொண்ட ஒரு சுற்றுக்கு இசைந்தபடி வைத்துக்கொள்ள வேண்டியது. மேற்படி மந்திரம் முதலானவைகளை மேற்படி மணிகளுக்காவது இழைகளுக்காவது உட்புகப்பண்ணிப் பூசித்துக் கொள்ள வேண்டியது.

இந்த நோன்பு ஆவணித்திங்களில் தொடங்கிப் புரட்டாசித்திங்களில் முடிவு செய்கிறதாயிருந்தால் ஐப்பசித்திங்களில் பொதுவான பக்கத்தில் நோன்பு நேரிடமாட்டாது. அப்படி இல்லாததால் ஒரு காலத்தில் நான்கு பக்கத்தில் முதன்மைப் பக்கமாய் நடத்தவேண்டிப் பேர்களுக்கு ஐப்பசித்திங்களில் நேரிடும் ஆதலால், ஐப்பசித்திங்கள் ஒப்புக்கொள்ளப்பட்டதே யல்லாமல் ஐப்பசித் திங்களில் பண்ணச்சொல்லித் தனியாக விதி உண்டாகவில்லை.

பரமேசுவரர்க்குக் கேதாரேச்சுரர் என்று பெயர் வந்த வரலாறும் தேவியார் தவம் செய்த வரலாறும் பிருங்கி மகா முனிவர் வரலாறும் நோன்பு செய்யவேண்டிய முறைமைகளும் பவுடியோத்ர புராணத்தில் கண்டுகொள்ளல்வேண்டும். கேதாரேச்சுர நோன்பு பண்ணவேண்டியதற்குக் காரணம் சிந்தியம் என்னும் ஆகமத்தில் விதித்திருக்கின்றது.

கைலாயத்தில் பரமசிவனும் பார்வதியும் எழுந்தருளியிருக்கும்போது தேவ முனிவராகிய பிருங்கி மகா முனிவர்

பரமேச்சுரனைக் கண்டு நினைந்து துதித்து பரமேச்சுரியை நீக்கிப் பரமேச்சுரனை மட்டும் வலம்வந்து வணங்கினார். அதைக் கண்ட தேவியார் பரமசிவனை நோக்கி அடிகாள் இந்த முனிவரானவர் என்னை நீக்கித் தங்களை மாத்திரம் வலம் வந்து வணங்கி வழிபடக் காரணம் என்ன என்று கேட்க, அந்த முனிவரானவர் மூமூட்சுவும் விருப்பற்ற வரும் ஆனதாலும் நீ முத்திகொடுக்கும் உரிமை அற்றவள் ஆதலாலும் நம்மைமட்டும் வலம் வந்து வணங்கினார் என்று பரமேச்சுரர் திருவுளம் பற்ற, இதைக் கேள்வியுற்ற தேவியார் சினந்து இந்த முனிவருடைய குருதி, ஊன்கள் நம்முடைய ஆற்றலாலானது; அதனால் அல்லவா வலம்வந்து வழிபட்டார் என்று தேவியார் திருவுளம் பற்றியதைக் கேள்வியுற்ற முனிவரானவர் உடனே தமது உடம்பிலுள்ள இரத்த மாமிசங்களை உதறிவிட்டுத் தோலும் என்புமாய்ச் சந்நிதானத்தில் நின்றனர். அதைக் கண்ட பரமேச்சுரர் உடனே அருள்கூர்ந்து மேற்படி முனிவர்க்கு நடுக்கால் ஒன்று தந்து உயிர்களின் காப்பின் பொருட்டுக் கையால் தலையைத் தொட்டு அருளினார்.

இதனைக்கண்ட பரமேச்சுரியானவர் உடனே கௌதம நிலயத்திற்கு எழுந்தருளிப் பரமேச்சுரர் தமக்கு நடப்பித்த மரியாதைக் குறைவுகளைக் கௌதம முனிவருடனே திருவுளம்பற்ற அவர் நீளநினைந்து தாயே பரமேச்சுரன் செய்த செயல் சரியே. தேவரீர் தவம் செய்து பரமேச்சுரனிடத்தில் உடலில் பாதி பெற்றுக்கொண்டால் இப்படி நேரிடமாட்டாது என்று தெரிவித்துக்கொள்ள, தேவியானவர் பத்ரி கேதாரம் என்னும் பெரிய தலத்தில் எழுந்தருளி 21 நாள் தவம் பண்ணி பரமேச்சுரனிடத்தில் உடம்பில் ஒருபாதிப் பெண்ணுருவமாகப் பெற்றுக்கொண்டார். இந்த நோன்பைக் கோயில்களிலும் 21 நாள் தேவி நோன்பு விழாவாக நடத்தும்படி ஆகமத்தில் விதித்திருக்கின்றது. மூவகை முனிவர்களில் பிருங்கி முனிவர் தேவ மகா முனிவர் இனத்தைச் சேர்ந்தவர்.

6. மாமண நோன்பு

பங்குனித் திங்கள் உத்திர நாளில் கதிர் எழும்போது எழுந்து பரமசிவனேயும் பார்வதி தேவியாரையும் திருமணக் கோலமாக நினைந்து நீராடல் முதலிய நாட்செயல்களை முடித்துச் சுவாமியையும் தேவியாரையும் பொன்னால் மண வாளக் கோலமாக திருவுருவமைத்து ஓர் இடத்தைச் சுத்தி செய்து, மேற்சொல்லியதுபோல் நெல்பரப்பி அதன்மேல் குடம்வைத்து நீர்நிறைத்து மாந்தழையிட்டுப் பொன் னினால் அமைக்கப்பட்ட திருவுருவங்களை ஆனைந்தினால் சுத்திசெய்து குடத்தின்மேல் வைத்து 16 வகை மரியாதை களுடன் பூசைசெய்து ஓர் அந்தணரையும் அவர் மனைவியா ரையும் வருவித்துச் சிவனும் சிவை(சத்தி)யுமாகக் கருதிப் பூசைசெய்து அவர்களுக்கு ஆடை அணி முதலானவைகள் கொடுத்து உணவருத்தி வழிபட்டு வணங்கி மனை இடத்து வந்து பொழுதுமறைந்ததும் நடக்கத்தக்க முறைமைகளை நடத்திக்கொண்டு சிவனடியார் மனைவி மக்கள் முதலான உறவினர்களுடன் உண்டு புற்பரப்பி அதன்மீது படுத்து உறங்கி விடியற்காலம் துயில் நீங்கி நாட்கருமங்களை முடித்துப் பூசித்துத் திருமணக்கோல வடிவங்களை அந்த ணர்க்கீந்து சிவனடியார்களுடன் அமுதுகொள்க. இந்த விரதத்தால் வேண்டிய வரங்கள் கிடைக்கும்.

7. முத்தலை வேல் நோன்பு

செங்கதிரோன் வடபால் செல்லும் நற்பொழுதாகிய தை முதல்நாளில் முன் சொன்னபடி நாட்கருமங்களை முடித்துப் பார்வதி பரமேச்சுரர்களை, பொன் அல்லது வெள்ளியினால் திருவுருவமைத்து முத்தலை வேலும் செய்து இறைவன் திருக்கையில் சாத்தி வழிபடுதல்.

8. பெற்றம் ஊர்ந்த பெருமான் நோன்பு

வைகாசித் திங்கள் வளர்பிறை 8 ஆம் நாளில் மேற் கூறியபடி பொன்னினால் பார்வதி பரமேச்சுரன் இடப வாகனம் செய்து அவ்வாகனத்தின்மேல் எழுந்தருளப் பண்ணி முன்சொன்னதுபோல் கும்பத்தின்மேல் வைத்து வணங்கி அன்று முழுவதும் உணவு உறக்கமில்

லாமல் சிவபுராணம் கேட்டுக்கொண்டிருந்து பொழுது புலர்ந்ததும் நாட்கரும முறைகளை முடித்துக்கொண்டு உணவுகொள்ளல் வேண்டும்.

சிவபெருமான் நோன்பு முற்றிற்று.

---

௨. பார்வதி தேவியார் நோன்பு

வெள்ளிக்கிழமை, ஐப்பசித்திங்கள் உத்திரநாள், நவராத்திரி, இந்நாட்களில் கைக்கொள்ளும் நோன்பு இது.

1. வெள்ளிக்கிழமை நோன்பு

சித்திரைத் திங்கள் வளர்பிறை முதல் நாளும் வெள்ளிக்கிழமையும் சேர்ந்த நாளில் தொடங்கி வெள்ளிக் கிழமைதோறும் மேற்சொல்லிய முறைப்படி கைக்கொள்ள வேண்டும். இந்த நோன்பை வெள்ளிப் புத்தேள் முதலில் கைக்கொண்டு பேறுபெற்றபொழுது அந்த நாளுக்கு வெள்ளிக்கிழமை என்று பெயர் வழங்கும்படியாகப் பார்வதி தேவியாரிடத்தில் வரம் பெற்றுக்கொண்டான். இந்த நோன்பைக் கைக்கொள்ளும் பூசையில் பார்வதி தேவியாருக்குச் சருக்கரை படைக்கவேண்டும்.

2. ஐப்பசித் திங்கள் உத்திரநாள் நோன்பு

ஐப்பசித் திங்கள் உத்திரநாளில் மேற்கூறிய விதிப்படி கும்பம் வைத்துப் பொன்னினாற் செய்யப்பட்ட பார்வதி தேவியார் திருவுருவத்தை அக்கும்பத்தின்மேல் வைத்துப் பூசித்துத் தொழுது போற்றிப் புகழ்தல் வேண்டும்.

3. நவராத்திரி (ஒன்பதிரா) நோன்பு

புரட்டாசித் திங்கள் வளர்பிறை முதல்நாள் தொடங்கி எட்டு நாளும் மேற்கூறியபடி பூசித்துப் பழம் முதலானவற்றையே உட்கொள்ளவேண்டும். ஒன்பதாம் நாளாகிய நவமிநாளிலும் அவ்வாறு இயற்றி, மறுநாள் தசமி பத்தாம் நாள் பட்டினி விட்டு உணவு கொள்ளவேண்டும்.

பார்வதி தேவியார் நோன்பு முற்றிற்று.

ரு. சிவராத்திரி

வாதுளம், காமிகம், காரணம், லளிதை, கிரணம், செயம், சுப்பிரபேதம், தீப்தம் என்னும் இவ்வெட்டு ஆகமங்களிலும், சாலோத்தரம், காலநிர்ணயம என்னும் இவ்விரண்டு உபாகமங்களிலும் பவுடியோத்தரம், காந்தம், வாயு என்னும் இம்மூன்று புராணங்களிலும் விதித்திருக்கின்றது.

1. சிவராத்திரியின் காலவரையறை

மாசித் திங்கள் தேய்பிறை பதினான்காம்நாள் பதினான்கு நாழிகை லிங்கோற்பவ (சிவக்கொழுந்து தோன்றுகிற) காலத்தில் மகா சிவராத்திரி நற்காலம்.

தேய்பிறை பதின்மூன்றும் நாள் ஞாயிறு தோன்றி முப்பது நாழிகைக்குப் பதினான்கு நிறைந்திருப்பது சிறப்பு. பதின்மூன்றும் நாள் இரவு பதினொன்றேகால் நாழிகைக்குப் பதினான்காம்நாள் நிறைதல் இடைநிலையது. பதின்மூன்றும்நாள் ஞாயிறு தோன்றி இருபத்தொன்பது நாழிகைக்குப் பதினான்காம் நாள் நிறைந்திருப்பது கடைநிலையது.

சிவராத்திரி நாளில் பதின்மூன்றும் நாள் நிறைவாயில்லாமல் சுத்தமாகப் பதினான்காம்நாள் மட்டும் நிறைந்திருப்பது கடையிற் கடையாயது. ஒருகாலம் அன்றைய இராத்திரிக்கு அமாவாசை புகுவது ஈண்டுச் சிவராத்திரி என்றறிக. ஒருகாலம், மாசித்திங்கள் முதலிலும் கடையிலும் சிவராத்திரி புண்ணியகாலம் ஏற்படுமானால், பதினான்காம் நாள் அதிகப்பட்டிருக்கிற நாளில் நோன்பு முதலியவற்றை நடத்தவேண்டியது.

இந்த மகா சிவராத்திரி நாளில் திருமாலின் நாளாகிய திருவோணமும் கூடுமானால் சிறப்பு மகா சிவராத்திரி என்றறிக.

இந்த மகா சிவராத்திரி காலத்தில் ஏற்படுகிற பதின்மூன்றும் நாளானது பரமசிவத்துக்கு உடம்பாகவும், பதி

ஞன்காம் நாள் உடம்புடையதாகவும் இருப்பதும் அல்லாமல், பதின்மூன்றும்நாள் சத்தியாகவும், பதிஞன்காம் நாள் சிவமாகவும் மேற்படி ஆகமங்களில் விதித்திருக்கின்றது.

சிவராத்திரிக்கு அடுத்தநாள் பதிஞன்காம் நாள் பட்டினிவிட்டு உணவு கொள்வது சிறந்தது. இதன் பயன் கோடி வேள்விப் பயனும். பதிஞன்காம்நாள் விரவாத பொழுது உணவுட்கொள்வது பரியாயம்.

2. சிவராத்திரியின் பூசைமுறை

சிவராத்திரி நாளில் பரார்த்த (உலகப்) பூசையாவது ஆத்துமார்த்த பூசையாவது தங்கள் தங்கள் முறைப்படி நடத்தவேண்டியது.

சிவராத்திரி முதல்யாமம்தொட்டு யாமந்தோறும் நான்கு யாமமும் பூசை நடத்தவேண்டியது.

உலகுக்காவது ஆத்துமார்த்தத்துக்காவது சூரிய தேவர் முதலான சுற்றுத் தெய்வங்கட்கும், அம்மையப்பர் பிள்ளை முதலானவர்கட்கும் பூசை நடத்தவேண்டியதில்லை. உலகுக்கு மகாலிங்கம் முதலான மூலமூர்த்திகளுக்கும், ஆத்துமார்த்தத்துக்கு மகாலிங்கமூர்த்திக்கு மாத்திரம் நடத்தவேண்டியது.

பரார்த்தத்துக்குத் துவார (வாயில்) பூசையும் நாள் விழா முதலானவைகளும் நடத்தவேண்டியதில்லை.

பரார்த்தத்துக்கு ஆவது ஆத்துமார்த்தத்துக்கு ஆவது மகா கணபதிக்கு மாத்திரம் நான்கு காலத்திற்கும் பூசை நடத்தலாம். பரார்த்தத்துக்கு முதற்கால மாத்திரம் நூற்றெட்டுக் கும்பம் மூலமாக ஸ்தபனங்க (கும்பபூசை) அபிடேகம் நடத்தவேண்டியது.

பதார்த்தத்துக்கு ஆவது ஆத்துமார்த்தத்துக்கு ஆவது அபிடேகம் முதலானவைகள் நடத்தவேண்டிய விதி அடுத்த பக்கத்தில் காண்க.

1	2	3	4	5	6	7	8
காலம்	திருமுழுக்கு	ஆடை	தழை	மணம்	படைப்பு	புகை	ஒளி
முதற் காலம்	ஆனைந்து	செம் பட்டு	வில்வம்	பச்சைக் கற்பூரம் சேர்ந்த சந்தனம்	பாற் பொங்கல்	சாம்பிராணி சந்தனக் கட்டை	புட்ப தீபம்
இரண்டாங் காலம்	பஞ்சாமிர் தம்	மஞ்சள் பட்டு	குருந்தை	அகில் சந்தனம்	பாயசம்	குங்குமம் சாம்பிராணி	நட்சத் திரதீபம்
மூன்றாங் காலம்	பலோதகம்	வெண் பட்டு	கிளுவை	கத்தூரி சேர்ந்த சந்தனம்	எட் சோறு	மேகம் கருங் குங்குலியம்	ஐந்து முகதீபம்
நான்காம் காலம்	மணங்கலந்த நீர்	நீலப் பட்டு	கரு நொச்சி	புனுகு சேர்ந்த சந்தனம்	வெண் சோறு	கற்பூரம் இலவங்கம்	மூன்று முக தீபம்

இவ்வண்ணமாக நான்கு காலமும் பூசிக்கும்பொழு தெல்லாம் சண்டேசர் பூசையும் நடத்தவேண்டியது.

மேல் எழுதிய நான்குகாலப் பூசைக்கும் விதித்திருக் கிற பொருள்கள் சிவராத்திரிச் சிறப்பு நாளானதால், இவைகளோடு பொதுவிதிப்படி செய்யப்படும் அபிடேக முதலியவைகளும் தழை மலர்களும் பலவகைச் சோறு களும் பணிகார வகைகளும் பதினறுவகை மரியாதை யோடு தீப வழிபாடுகளும் நடத்தவேண்டியது.

இந்த நான்குகாலப் பூசைகளும் மகாலிங்கமூர்த்திக்கு எட்டு மலர் முறையாக நடத்தவேண்டியது. அட்டபுட்ப (எட்டு மலர்) விதியை ஆசாரியர் மூலமாய் உணரவேண் டியது. அட்டபுட்பம் என்பது அருச்சனைக்காகிய எண் வகை மலர்களும் அன்றியும் மந்திர பூர்வமாயுள்ள தென்றும் உணர்க.

3. பூசை நடத்தவேண்டிய முறைமை

நான்கு காலத்திற்கும் காலாகாலமும் பூசை நடத்து வது சிறந்தது. நான்கு காலத்திற்கும் ஒரு காலமாகச் சேர்ந்து நடத்துவது இடைநிலையது. ஆத்துமார்த்த பூசை பண்ணுகிறவர்களுடைய திறனற்ற தன்மையில் தம் முடைய ஆசாரியாரைக்கொண்டு நடத்துவது சிறப்பாகும்.

பிற ஆச்சாரியார்களைக் கொண்டு நடத்துவது இடை நிலையது. தன்போன்ற பூசையுள்ளவர்களைக் கொண்டு நடத்துவது கடைநிலையது. உற்றுரைக் கொண்டு நடத்து வது கடையிற் கடைநிலையது. கூலிகொடுத்து நடத்துவது பரியாயம்.

4. உடையவர் பூசைக்கு வேண்டும் இடவிதி

கோயில், புண்ணிய இடம், ஆற்றோரம், மலையடி, மலர் வனம், குருவின் வீடு, தன் வீடு இந்த இடங்களில் எங்கே யாவது பண்ணலாம்.

சிவராத்திரி புண்ணிய காலத்திற் பண்ணவேண்டிய தானமுறை: சிவலிங்கம், சிவமணி, திருநீற்றுப்பை, நவரத்தினம், பொன், வெள்ளி, பசு, நிலம் முதலான தானங்கள் பண்ணுவதும் அல்லாமல் மறுநாள் அந்தணர்க்குப் பொருட்கொடையும் சிவனடியார் பூசையும் நடத்த வேண்டியது.

5. தான காலம்

நான்கு காலமாகவாவது, ஒரு காலமாகவாவது பூசை பண்ணிச் சண்டேசர் பிரீதியானவுடனே மேற்படி தானங்களைப் பண்ணவேண்டிய இந்த மகா சிவராத்திரி நோன்பு கிருத யுகத்தில் விநாயக மூர்த்தியும், திரேதா யுகத்தில் ஆறுமுகக் கடவுளும், துவாபர யுகத்தில் பிரமதேவரும், கலியுகத்தில் திருமாலும் கைக்கொண்டுளார் என்று மேற்படி ஆகமங்களில் விதித்திருக்கிறது.

இந்த நோன்பை மூன்று வகையாகக் கைக்கொள்ள வேண்டியது.

6. மூவகைக் கைக்கோடல்

இந்த மகா சிவராத்திரி நோன்பைக் கைக்கொள்ளும் உயிர்வகைகள் அடையும் பயன்:

மேற்படி நோன்பைப்பற்றி ஊக்கப் பற்றறுதியுடன் பயனை எதிர்பாராமல் மேற்கொள்கின்றவர்கள் நல்லாரிணக்கம் இடம் பொருள் ஏவல் முதலிய சிறப்புக்களையும் மறுமையில் சொர்க்க இன்பத்தையும் அடைவார்கள்.

பயனேக்காது கைக்கொள்கின்றவர்கள் இவ்வுலகில் இன்பமும் மறுவுலகில் மனைவி மக்கள் நண்பர்களுடன் விடுதலையும் அடைவார்கள். இந்த நோன்பை மேற்கொள்பவர்கள் பிறப்பு முதல் இறப்பு வரையுமாவது, இடையில் இருபத்துநான்கு அல்லது பன்னிரண்டு ஆண்டுகளாவது கைக்கொண்டாலும் மேல் எழுதிய பலனைத் தரும் என மேல் எழுதிய ஆகமங்களில் விதித்திருக்கின்றது.

7. சிவராத்திரியின் காரணம்

மேற்படி ஆகமங்களில் விதித்திருக்கின்றது.

நான்கு முகங்கொண்ட அயனும், திருமாலும் தங்களுக்குள் தாங்கள் சொற்போரிட்டுத் தன்னைத் தேடின பொழுது, பரமசிவன் திருவுளம் இரங்கி, மாசித்திங்கள் தேய்பிறை பதினான்காம்நாள் திங்கட்கிழமை திருவோணங்கூடிய நல்லநாள் இராத்திரி பதினைந்து நாழிகையில் மேற்படி தாணுவில் நின்றும் மகேசுர மூர்த்தமாக அடியும் முடியும் காட்டாமல் அவ்விருவர்க்கும் காட்சியளித்து இவர்களுடைய வரலாற்றை விசாரிக்கும் இடத்தில், பிரமதேவர் பரமசிவத்தின் திருமுடியைக் கண்டதாகப் பொய்யும், திருமாலானவர் திருஅடியைக் காணவில்லை என்று மெய்யும் விளம்பினபடியால், நான்முகனுக்குக் கோயில் இல்லாமற் போவது என்று சாபமும், திருமாலுக்குக் காத்தற் சிறப்புரிமை உண்டாகக்கடவது என்று வாழ்த்தும் அருளியதுமன்றி, அக் காட்சி ஒரு மூன்றேமுக்கால் நாழிகையளவு விளங்கி மற்றத் தேவர்களெல்லாரும் கண்டுள்ளமையால், 'லிங்கோற்பவ காலமோ ந முகூர்த்தம்' என்று மேற்படி ஆகமம் விதித்திருப்பதுமல்லாமல் இராத்திரி காலத்தில் பரமசிவன் மகேசுவர மூர்த்தமாகத் தோன்றியபடியால் சிவராத்திரி என்று பெயர் வந்தது.

பரமசிவமானது நெருப்புத் தாணுவினின்றும் தோன்றினதாலும் அந்தத் தாணு லிங்க வடிவமானதாலும் இலிங்கத்தினின்றும் மகேசுர மூர்த்தமாய்த் தோன்றியதாலும் 'இலிங்கோற்பவம்' என்று பெயர் ஏற்பட்டது.

இந்த மகேச்சுரமூர்த்தியைச் சிவன் கோயில்களில் மகாலிங்கமூர்த்தி எழுந்தருளியிருக்கின்ற கர்ப்பக் கிருகம் அந்தராளங்களில் நியமித்திருக்கின்ற ஐந்து கூடங்களில் கண்டுகும்பிடத் தெரியவரும்.

படைப்பில் அடங்கிய அணுபட்ச—பிரம, விட்டுணு, உருத்திரமூர்த்திகளானதாலும். சிவராத்திரி காலவரையில் இவர்களுக்குப் படைத்தல் காத்தல் அழித்தல் ஆகிய மூன்று தொழில்களும் இல்லாதிருந்தமையாலும் சிவராத்திரி காலந்தொட்டுத் திருமாலுக்குச் சம்புபட்ச பரமசிவ

M. Growtho

மானது காத்தற்றொழில் புரிந்துவரும்படி திருவருள் புரிந்திருப்பது காரணம்.

இதன் உண்மையை வேதாகமபுராண வாக்கியங்களில் காண்க. மகா சிருஷ்டி (படைப்பு) என்பது வேர் முதலான படைப்பு.

சிவராத்திரி முற்றிற்று.

கூ. பிரதோட காரணம்

சகலாகம சங்கிரகம், உத்தரகாரணம் என்னும் இவ்விரண்டு ஆகமங்களிலும் விதித்திருக்கின்றது.

1. பிரதோடத் தோற்றம்

சதாசிவமானது சண்முக மூர்த்திக்குப் போதித்தல்.

சுரரும் அசுரரும் திருப்பாற்கடல் கடைய முயற்சித்து மந்தரமலை என்னும் மலையை நிலைமத்தாகவும், வாசுகி என்னும் ஆதிசேடனை நாணாகவும் பிணித்துச் சுரர் ஒரு புறமும், அசுரர் ஒருபுறமுமாக நின்று கடையும்பொழுது, அக் கடலினின்றும் கற்பகதரு முதலானவைகளும், காம தேனுவும், பெண்மணி, ஆண்மணி, மலர்மணி, மிருகமணி—நாலுவகையான சித்திர விசித்திர அணிகளும்,நவமணிகளும் உண்டானதும் அன்றி, மேற்படி நாணாகிய வாசுகி என்னும் பாம்பு, மேற் சொல்லப்பட்டவர்கள் வருத்தும் வருத்தம் பொறுக்கமாட்டாமல் ஆலாலம் என்னும் நஞ்சைக் கக்கிற்று. அப்படிக் கக்கப்பட்ட நஞ்சானது, அக்கடலினின்றும் அதிவிரைவாகப் புறப்பட்டதைக் கண்ட தேவர் முதலானவர்களெல்லாம் நடுநடுங்கி மேற்படி நஞ்சின் கொடுமையைத் தாங்கமாட்டாமல் பரமேச்சுரரை நோக்கிச் சாமி! இந்நஞ்சானது எங்களைக் கொன்று போடும். நாங்கள் என்ன செய்யப்போகிறோம் என்று முறையிட்டபோது, பரமேச்சுரர் திருவுளம் இரங்கிப் பயப்படாதீர்களென்று அடைக்கலக் கை தந்து மேற்படி தேவர்

முதலானவர்களும் மற்றுமுள்ள உலகங்களும் உய்யும் பொருட்டுத் திரயோதசி (பதின்மூன்றும்) நாள் ரஜனிமுக வேளையில் (மஞ்சள் வெயில் காயுங்காலம்) மேற்படி ஆலாலம் என்னும் நஞ்சை உட்கொண்டு தேவருக்கு அருள்புரிந்தார்.

2. மணிவகை

மரமணிவகை:— கற்பகம், சந்தானம், தேவதாரம், மந்தாரம், பாரிசாதம் ஆக ஐந்து.

பெண்—இலக்குமி, ஆண்—மதி, மிருகம்—வெள்ளை யானை, மலர்—பொற்பூ, உடை—பட்டு. பரமேச்சுரரானவர் ஆலால நஞ்சை உட்கொண்டபொழுது அது பரமேச் சுரரின் கண்டத்தில் நின்று, கண்டம் கறுத்தபடியால் நீல கண்ட பரமேச்சுரர் என்ற பெயர் உண்டாயிற்று.

3. பிரதோஷ காலவரையறை

பூர்வகாரணம், உத்தரகாரணம், அம்சுமான், சகலாகம சங்கிரகம் என்னும் இந்நான்கு ஆகமங்களில் விதித்திருக் கின்றது.

வளர்பிறைப் பதின்மூன்றுவது நாள், தேய்பிறைப் பதின்மூன்றுவது நாள் இவற்றில் ஞாயிறு தோன்றி மறை யும் வரை அறுபது நாழிகை இருப்பது சிறந்தது (முதல் நிலையது).

ஞாயிறு தோன்றி முப்பது நாழிகை இருப்பது இடை நிலையது. ஞாயிறு எழுந்து இருபத்தாறேகால் நாழிகைக்கு மேல் ஒரு விஞடியாவது இருப்பது கடைநிலையது.

பன்னிரண்டாம் பிறை கலந்து வருகின்ற பதின்மூன் றும் பிறை கடையிற் கடைநிலையது.

பன்னிரண்டாம் பிறை கலந்த பதின்மூன்றும் பிறை என்பது முதல், பன்னிரண்டாம் பிறை முப்பது நாழி கைக்குமேல் பதின்மூன்றும் பிறை புகுந்து மறுநாள் இரு பத்தாறேகால் நாழிகை இருக்குமாஞல், முதஞள் பிரதோட

காரியங்கள் நடத்த வேண்டியது. ஒருவேளை மறுநாள் ஞாயிறு தோன்றி இருபத்தாறே கால் நாழிகைக்குமேல் ஒரு விஞடி நாழிகையிலாவது இருக்குமாகில் அன்றைய நாளே நடத்த வேண்டியது.

4. பிரதோட கால விளக்கம்

பதின்மூன்றும் பிறை ஞாயிறு எழுந்து இருபத்தாறே கால் நாழிகை முதல் இராத்திரி மூன்றேமுக்கால் நாழிகை வரைக்கும் நாழிகை ஏழரை—இந்த நாழிகை ஏழரையில் மஞ்சள் வெயில் காயுங் காலத்தில் உண்டாகும் பிரதோட காலத்தை ஒப்புக்கொள்ள வேண்டியது.

ஞாயிறு தோன்றி இருபத்தாறேகால் நாழிகை முதல் முப்பது நாழிகை வரைக்கும் நாழிகை மூன்றே முக்கால்.

நாள்-ஒன்றுக்கு. முகூர்த்தம் பதினறு.

இவற்றுள் மத்தியான முகூர்த்தம் எட்டு. மத்தியான முகூர்த்தம் எட்டில் ஞாயிறு எழுந்தது முதல் ஏழு முகூர்த்தத்தைக் கழித்து எட்டாவது முகூர்த்தம் பிரதோட காலம் என்று அறிக.

இந்த முகூர்த்தம் மூன்றே முக்கால் நாழிகையை மூன்று பிரிவாகப் பிரிக்கப் பிரிவு ஒன்றுக்கு நாழிகை ஒன்றேகால். இம் மூன்று பிரிவுகளில், முதற் பிரிவில் பிரதோடம் நடத்துவது முதன்மையானது. இரண்டாம் பிரிவில் நடத்துவது இடைநிலையது. மூன்றும் பிரிவில் நடத்துவது கடைநிலையது. இம்மூன்று பிரிவிஞலும் உண்டாகும் பயன் ஒன்றிற்கொன்று வேறுபட்டதல்ல என்றறிக.

பரமசிவமானது மஞ்சள் வெயில் காயும் பிரதோட காலத்தில் தேவதைகள் முதலியவர்கட்கு அருள்புரிந்ததென்றும், பொழுது அடைந்த மூன்றே முக்கால் நாழிகையாகிய பிரதோட காலம் பரார்த்த சிவதரிசனத்துக்குப் பரியாயபட்ச காலம் என்றும் மேற்படி ஆகமங்களில் விதித்திருக்கின்றது.

இந்தப் பிரதோடகாலத் திட்டமானது சிவன்கோயில்களுக்கும் சிவ வழிபாடு செய்கின்றவர்களுக்கும் நோன்பு கைக் கொள்பவர்களுக்கும், ஆத்மார்த்த பூசை பண்ணுகின்றவர்களுக்கும் விதித்திருக்கின்றது.

பிரதோடம் என்பது முற்பிறப்பிற் செய்த குற்றநீக்கம். இதன் பயன் மொழிக்கும் நினைவுக்கும் அப்பாற் பட்டதாதலால், மேற்படி ஆகமங்களிலும், புராணங்களிலும் கண்டுகொள்ள வேண்டியது.

பரமசிவமானது மஞ்சள் வெயில் காயும் பிரதோட காலத்தில் அருள்புரிவதைப் பெற்றுக்கொண்ட தேவதைகள் முதலியவர்கள் பொழுதடைந்த பிரதோட காலவரையில் பரமசிவத்தைவிட்டு நீங்கச் சென்றமையால் மேற்படி காலத்தையும் பிரதோட காலம் என்றும் விதிக்கலாயிற்று.

பிரதோட காரணம் முற்றிற்று.

எ. கார்த்திகை விளக்கு விதி

காரணம், காமியம் விசயம், என்னும் இம்மூன்று ஆகமங்களிலும் விதித்திருக்கின்றது.

கார்த்திகைத் திங்கள் வளர்பிறைக் கார்த்திகை நாளில் தீபம் (விளக்கு) வைக்கவேண்டியது. கார்த்திகை நாளுக்கு முன்னுள் பரணிநாள் சாயும் காலையில் தலைநாள் (அதிவாச) தீபத்தில் அக்கினிகாரிய முதலானவைகள் மூலமாய் மேற்படி தீபத்தில் மகாலிங்கமூர்த்தியை எழுந்தருளப்பண்ணி மேற்படி தீபத்தை மேற்படி சந்நிதானத்தில் தானே பூசித்துவைத்து அடுத்தநாள் சாயும் காலையில் அர்த்த சூரிய மண்டல சமயத்தில் (நன்பகலில்) தீபதண்டம் சமைத்து வைத்திருக்கிற கோயிலுக்கும் இந்திர திக்கிற்கும் நடுஇடமாகிய பிரமத்தானத்தில் நிறுத்த வேண்டியது.

1. தண்டவிதி

தென்னைமரம் சிறந்தது. பனை இடைநிலையது. கமுக மரம் கடைநிலையது. வாழைமரம் மூங்கில் கடையிற் கடைநிலைய.

தண்ட உயரம்

சுவாமி கருப்பக்கிரகத்து விமான உச்சி அளவினது முதன்மையானது. மேற்படி விமானக் கழுத்து அளவு மட்டும் உயர்ந்திருப்பது; இடைநிலையது. மேற்படி தண்டத்தோடு உயர்ந்த பனை ஓலையும் கட்டவேண்டியது.

2. ஓலைவிதி

உலர்ந்த தென்னை ஓலை, உலர்ந்த பனைஓலை, உலர்ந்த கமுகஓலை, உலர்ந்த வாழைச்சருகு, உலர்ந்த அசோகப் பத்திரம், மேற்படி சருகுகளை மேற்படி தீப தண்டத்தில் (ஒளிமரத்தில்) விமானம்போல் கட்டிக் கொளுத்த வேண்டியது.

3. தீபதண்டம் அமைப்பின் காரணம்

சுவாமி ஒளிவடிவமாய் எழுந்தருளிய பாவனை (கருத்து). இந்தத்தீபம் மலைப்பகுதிகளுக்கு நாள்மீன், சமுத்திரபகுதிகளுக்குப் பருவம், பிரமாணமுமாக மேற்படி ஆகமங்களில் விதித்திருக்கின்றது.

4. கார்த்திகை விளக்கீட்டின் காரணம்

காரணம், காமிகம், விஜயம் என்னும் இம்மூன்று ஆகமங்களிலும் விதித்திருக்கின்றது.

கைலாயத்தில் பரமேச்சுரரும், பரமேச்சுரியும் எழுந்தருளியிருக்கும்போது அவ்விடத்தில் ஏற்றியிருந்த நெய் விளக்குகளில் ஒருவிளக்கு அணைந்துபோகிற தருணத்தில் ஓர் எலியானது அதில் இருந்த நெய்யை அருந்தப்போன பொழுது அவ் எலியின் முகமானது அணைந்துபோகிற திரியைத் தூண்டிய மாத்திரத்தில் ஒளி மிகுந்ததனால் பரமேச்சுரர் அருள்கூர்ந்து அவ் எலிக்கு மானிட உடம்பும்

பதினுறுபேறும் தந்து உலகத்தில் பிறக்கும்படி கட்டளை யிட்டார். அவ் எலியானது உலகத்தில் சக்கரவர்த்தியாய்ப் பிறந்து எல்லாச் செல்வத்தையும் நுகர்ந்திருக்கும் காலத்தில் ஒருநாள் சிவவழிபாட்டுக்குப்போக முயற்சித்துத் தன் அரசச் சின்னம் முதலிய எல்லா ஆடம்பரச் சிறப்புடன் சிவன் கோயிலுள் புகுந்து வலம் வருகையில் அவ்விடத்தில் ஏற்றியிருந்த தீபத்தின் ஒருபொறி இந்தச் சக்கரவர்த்தியின் உடம்பில் ஒழுகிய மாத்திரத்தில் அவர் உடம்பு முழுவதும் புண் கண்டு வெகுநாள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கும்பொழுது ஒருநாள் பரமேச்சுரர் மனம் இரங்கி, 'சக்கரவர்த்தியே நீ மிகவும் செருக்குற்றவன் ஆகையால் இந்தப் புண் நம்மால் உனக்கு உண்டாயிற்று. நீ இன்றுமுதல் தேவமான அளவில் நூறுபாரம் நெய் முதலிய பொருள்களால் கோயில்களுக்கு விள்க்கு ஏற்றுவிப்பாயானுல் உனக்கு நம்மோடு சேர்ந்திருக்கும் நிலை தருவோம்' என்று வானெலியாய்த் திருவுளம் பற்றியதைக்கேள்வியுற்ற சக்கரவர்த்தியானவர் மகிழ்வடைந்து அன்றுமுதல் சிவன் கோயில்களிலும், மற்ற இருள் சூழ்ந்த காடுகளிலும் சாணக் குப்பை முதலிய இடங்களிலும் விளக்கு ஏற்றிக்கொண்டு வருங் காலங்களில் ஒருநாள் பரமேச்சுரர் திருவுளம் இரங்கிக் கார்த்திகைத் திங்கள் வளர்பிறைக் கார்த்திகை நாளில் சோதிவடிவாய் எழுந்தருளி மேற்படி சக்கரவர்த்திக்கு இரண்டறக் கலக்கும் நிலை உதவினர்.

அக் காலத்தில் பரமேச்சுரரின் காட்சிக்கு வந்திருந்த பிரம்மா விட்டுணு முதலிய தேவதைகளெல்லாம் நடுநடுங்கி பரமேச்சுரர் மிகுந்த கோபத்துடன் நெருப்பு வடிவாய் எழுந்தருளியிருப்பதால் அக் கோபவெப்பம் தணியும் பொருட்டு, பொரி அவல் இவற்றைப் படைத்தார்கள். இந்தச் சக்கரவர்த்திக்கு மா எலிச்சக்கரவர்த்தி என்று பெயராயிற்று.

கார்த்திகை விளக்குவிதி முற்றிற்று.

அ. தீபாவளி (தீபவரிசை)

(நரக சதுர்த்தசி)

காமியம், காரணம், வாதுளம், சுப்பிரபேதம் என்னும் இந்த நான்கு ஆகமங்களிலும் விதிக்கப்பட்டிருக்கிறது. தீபாவளி என்பதன் பொருள் தீபவரிசை என்பதாம்.

1. தீபம் வைக்கவேண்டிய காலம்

ஐப்பசித் திங்கள் தேய்பிறை 14-ம் நாள் பகலவன் (சூரியன்) தோன்றுதற்கு முன் ஆறுநாழிகை முதற் கொண்டு தீபம் ஏற்றவேண்டியது. மேற்சொல்லிய 14-ம் பிறைப் பகலவன் தோன்றுதற்குமுன் நீராடல்வேண்டும். எண்ணெயில் திருமகளையும் வெந்நீரில் வான்புனலையும் (கங்கை) வரப்பண்ணி நீராடுதல்வேண்டும். இங்ஙனம் நீராடுவதால் வறுமைகள் நீங்கி அளவில்லாத செல்வம் பெருகி மறுமையில் (கங்கை) வான்புனலாடிய பலனும் கிடைக்கும். இது தேவர்களுக்கும் பிதுரர்களுக்கும் உவப்பானது.

2. நீராடுவதற்குக் காரணம்

நரகாசுரன் என்பவனாலே வருத்தமுற்றிருந்த தேவர்கள் அவன் இறந்துபோனபோது அந்த மகிழ்ச்சியினால் மங்கலநீர் ஆடினார்கள்.

தீபவரிசை முற்றிற்று.

௬௨. திரு ஊசல் விழா

உத்தர காரணம், சகலாகமசங்கிரகம் என்னும் இவ்விரண்டாகமங்களிலும் விதித்திருக்கின்றது.

இது பராசத்தி (திருவருளாற்றலானவர்) தமது வேட்கை எண்ணம் கைகூட வேண்டுமென்று பரசிவத்தைக் குறித்து நோன்பு பூண்டருளிய விழா.

இது செய்யவேண்டிய நாளின் அளவு.

மார்கழித் திங்கள் வளர் ஆறும் பிறை சதயம் நன்னாள்முதல் நிறை நிலாத் திருவாதிரை நாள் வரைக்கும் நாள் பத்தும் முதன்மையானது. நாள் ஒன்பது, நாள் ஏழு இடைநிலைய. நாள் ஐந்து மூன்று கடைநிலைய. நாள் ஒன்று கடையிற்கடையது. இந்த நோன்பு விழா திருவாதிரை கழிந்த மூன்று நாள்கள் நடத்தும்படி ஈட்டுப் (பரியாய்) பக்கமாக மேற்படி ஆகமங்களில் விதித்திருக்கின்றது.

1. விழா முறைமை

இந்த நாட்களில் நாள்தோறும் ஞாயிறு எழுங்காலத்தில் விநாயகப்பெருமானுக்கு விழா நடத்தவேண்டியது. மத்தியான காலங்களில் வாழ்வரசி (சுமங்கலி)களுக்கு நல்ல உணவு உண்பித்து, ஆடை அணிகள் கொடுத்துப் பூசிக்க வேண்டியது.

சாயுங்காலையில் பராசத்தியாருக்கு திருவூஞ்சல் விழா நடத்தவேண்டியது.

இராத்திரி காலங்களில் பராசத்தியாருக்கு வாகன விழா நடத்தவேண்டியது.

2. ஊசல் விதி

ஊஞ்சல் டோளம் என்றும் அழைக்கப்பெறும். இஃது எட்டு வகைத்து.

(1) இரத டோளம் — இது தேர்போலவும்
(2) சக்கிர டோளம் — இது விருத்த(வட்டம்)மாகவும்

(3) கெஜ டோளம் — இது யானைபோலவும்
(4) வாஜ டோளம் — இது குதிரைபோலவும்
(5) ஸ்தம்ப டோளம் — இது தம்பம்(தூண்)போலவும்
(6) மகா டோளம் — இது விநோதமாகவும்
(7) யுகம டோளம் — இது இரண்டிரண்டு இணைந்த தாகவும்
(8) நர டோளம் — இது மனிதனைப்போலவும்

அலங்காரம் செய்யப்படும்.

3. ஊஞ்சல் அமைக்கவேண்டிய முறை

ஊசல் (டோளம்) சமைக்கவேண்டிய முறைமையைச் சிற்ப நூல்களிற் காண்க. ஊஞ்சல் சமைப்பதற்கு ஒன்பது மணிகள், பொன், வெள்ளி, பட்டாடைகள் வேண்டப்பெறும். இவைகளால் ஊஞ்சல்களைச் சமைத்துப் பொற் கொலுசுகளாலும் வெள்ளிச் சங்கிலிகளாலும், பட்டுக்கயிறுகளாலும் தூக்கவேண்டியது. பொற்கொலுசு சிறந்தது; வெள்ளிக்கொலுசு இடைநிலையது; செம்புக் கொலுசு கடைநிலையது; ஐந்து நிறப்பட்டுக்கயிறு கடையிற்கடையது.

பராசத்தியாரை இந்தப் பத்து நாளும் சாயுங்காலையில் எட்டு வகை ஊஞ்சலிலும் எழுந்தருளப்பண்ணி, பன்னிரண்டு, எட்டு அல்லது நான்கு உருத்திர கணிகையரைக்கொண்டு அசைக்கச் செய்தும், அக்காலத்தில் அடியவர்களாலே திருவூசல் முதலான தோத்திரங்களைப் பாடச்செய்து மேற்படி திருவூசல் விழா நடத்தவேண்டியது.

4. ஊர்தி வரிசை

முதல் நாள்	— புலி	ஆறும் நாள்	- சிவிகை
இரண்டாம் நாள்	— கிளி	ஏழாம் நாள்	- மஞ்சம்
மூன்றும் நாள்	— புரு	எட்டாம் நாள்	- குதிரை
நான்காம் நாள்	— சிங்கம்	ஒன்பதாம் நாள்	- இடபம்
ஐந்தாம் நாள்	— அன்னம்	பத்தாம் நாள்	- புட்ப விமானம்

இவ்வண்ணமாக நடத்தவேண்டியது.

ஊஞ்சலுக்கு இடவேண்டிய அறைக்கட்டுவிதி. அறை அறுபத்துநான்கு தூண்களும், அவற்றிற்குவேண்டிய விட்டம் முதலியவைகளுமாம்.

5. அறைகளின் அளவு

ஒவ்வொன்று எட்டு முழச்சதுரத்திற்குச் சதுரமும் உன்னதமுமாக இருக்கவேண்டும். அதற்கு வாசற்படி அகலம் முழம் நான்கு, உயரம் முழம் ஆறு, இவ்வாசற் படி நீளச்சதுரமா (செவ்வகம்) யிருக்கவேண்டியது. தூண் இருபத்துநாலங்குலம் அல்லது இரண்டு அடிக்கனமிருக்க வேண்டியது.

இவ்வறைகள் ஒவ்வொன்றுக்கு ஒவ்வொரு சிகரம் (கும்பம்) வைக்கவேண்டியது. இவ்வறைகள் ஒன்றோ டொன்று இணைந்ததாயிருக்கவேண்டியது.

சீதாலம், கரதாலம், கமுகு, தெங்கு, புன்னை, சண்ப கம் முதலியவற்றைத் தூண்களாகவும், விட்டங்களாகவும் அமைக்கவேண்டும்.

ஷை மரங்களின் மலர்களாலும், மற்ற அழகிய அற்புத மலர்களாலும், இடையில் ஐந்துநிறப் பட்டாடைகளாலும், வாழைப்பழச்சீப்புகளாலும், வாழைத்தார்களாலும், எலு மிச்சை, நாரத்தை, கிச்சிலி, தமரத்தை, பலா, கரும்பு, இளநீர் இவைகளாலும் அறைகள் ஒவ்வொன்றையும் அலங்கரிக்கவேண்டியது.

பராசத்தியானவர் பத்துநாளும் மேற்படி அறைகளின் இடமாக எண்வகை ஊசல்களிலும் நோன்புவிழாக்கொண் டருளுங் காலத்தில் பத்தாம்நாட் சாயுங்காலையில் பரமேச் சுரர் அம்மையப்பபிள்ளை அருளுருவாய் எழுந்தருளி உமையம்மையோடு தாமும் திருவூசல் விழாக் கொண் டருளி உமையம்மையாருக்கு விருப்பமானவற்றை அடை யும்படியாக அருள்புரிந்தனர்.

இந்த விழாக் கொண்டருளுந் தேவியாருக்குப் பரா சத்தி என்றும், வீரசத்தி என்றும் பெயர் வந்த வரலாறு

ஆகமங்களிலும் சிற்ப நூல்களிலும் கண்டுகொள்ள வேண்டியது.

வீரசத்தியாருக்கு இந்த நோன்புவிழாப் பணிவிடை நடத்தும் ஆன்மகோடிகட்கு இப்பிறப்பில் வேண்டிய பேறுகள் கிடைப்பதுடன், மறுமையில் சிவனோடு இரண்டறக் கலந்திருக்கும் பயனும் உண்டாம்.

பராசத்தியாருடைய மகாநோன்பு விழாவுக்கும் திருவாதிரைத் திருக்காட்சி விழாவுக்கும் யாதொரு தொடர்ச்சியும் இல்லை. இந்தப் பத்துநாளும் மாணிக்கவாசகமூர்த்திகளுக்காவது விழாக்கள் நடத்தும்படி இருபத்தெட்டு ஆகமங்களிலும் விதித்திருக்கவில்லை. ஆனால், இப்பொழுது சிவன் கோயில்களிலெல்லாம் மாணிக்கவாசக சுவாமிகளுக்கு விழா நடத்திவருவது காரணச்சிறப்பாய் நடந்து வருகிறது.

பராசத்தியாருக்கு நோன்பு விழாவானதால், கொடியேற்றம் முதலானவைகள் நடத்தும்படி ஆகமங்களில் விதித்திருக்கவில்லை. திருவாதிரைத் திருக்கூத்துக் காட்சி படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்து செயல்களையும் பற்றியதாயிருக்கின்றது.

திருஊசல் விழா முற்றிற்று.

கo. கூத்தப்பெருமான் விழா

பீடத்தைவிட்டு எழுந்தருள்வது படைப்பு. காப்புக் கட்டுவது காத்தல். சாந்து அணிந்துகொள்வது அழித்தல். வெள்ளை சாத்திக்கொள்வது மறைத்தல். விழாக் கொண்டருள்வதும் மட்டையடி அடிப்பதும் அருளல்.

செருக்குற்ற அசுரரை அழித்தபொழுது அவர்களுடைய உடம்பு கறுத்த பொடியாயிற்று. அதைப் பொட்டாக இட்டனர். அதைக் கருதியே சாந்து சாத்துவது.

அங்ஙனம் அழித்தபொழுது திருமேனி மிகக் கோப முற்றிருந்தது. அது தணியும்பொருட்டுத் தேவர்கள் அந்தத் திருமேனியை வெள்ளாடையாலும் வெண்மலர் களாலும் மறைத்தார்கள். இக்கருத்தே வெள்ளை சாத்து வது. இதன் விரிவை ஆகமங்களில் கண்டுகொள்க. இவ் விழா அறைக்கட்டு விழா என்று வழங்கப்பெறுகின்றது.

கூத்தப்பெருமான் விழா முற்றிற்று.

கக. தைப்பிறப்பாற்றல்

அமிசுமான் என்னும் ஆகமத்தில் விதித்திருக் கின்றது.

மகர சங்கிரமே சக்தி என்னும் சக்தியானவள் ஆடித் திங்கள் முதல் மார்கழித்திங்கள் வரைக்கும் தக்கிணயன மாகிய ஆறு திங்களும் மனிதருக்கு மூதேவி வடிவமாயும் பசுக்களுக்குப் புலிவடிவமாயும் பீடித்துக்கொண்டிருந்தாள். அந்தப் பீடை நீங்கி மனிதர் நலம் அடையும்பொருட்டுத் தைத்திங்கள் முதல்நாள் மகர சங்கிராந்தி உத்தராயண புண்ணிய நாள் சூரியதேவர் முதல் பிரம்மா விட்டுணு உருத்திரன் மகேச்சுரன் சதாசிவன் முதலான தேவதை களைப் பூசித்துப் பாற்பொங்கல் பண்ணி மேற்படி தேவதை களுக்குப் படைக்க வேண்டியதுமல்லாமல் பிதிர் தேவதை களுக்கு எள்நீர் இறைத்தல் முதலியவைகளும் பண்ணி அந்தணர்க்குப் பசுத்தானம் முதல் பத்துத் தானமும் கெஜ தானம் முதல் பதினாறு மகாதானமும் பண்ணவேண் டியது. மேற்படி காலம் ஆறு திங்களும் நாடும் வீடும் மூதேவி அடைந்திருந்தபடியால் மேற்படி உத்தராயண புண்ணியநாளில் கிராம சாந்தியும் வீடு சுத்தியும் பண்ணி மேற்படி படைப்பு முதலானவைகளைப் புதியபாண்டங்களில் பண்ணுவதுமல்லாமல் தக்கிணயன காலங்களில் ஆண்டு கொண்டிருந்த பழைய பாண்டங்கள் முதலான தட்டு முட்டு களையும் கழித்துவிட வேண்டியது. மறுநாள் சாயுங்

காலையில் பசுக்களைக் குளிப்பாட்டி அலங்காரம் செய்து கோயிலில் சுவாமி விழாக்கொண்டருளப் பண்ணியும் பசுக்களை முன் துரத்திப் பின்னே சுவாமியை எழுந்தருளப் பண்ணவும் வேண்டியது.

இப்படி நடத்துவதற்குக் காரணம் என்னவெனில் புலிகள் மேற்படி ஆறு திங்களும் பசுக்களைக் கொன்று தின்றுகொண்டிருந்தபடியால் அன்றைய நாள் சாயுங்காலையில் பரமசிவன் பசுக்களைக்கொண்டு புலிகளைத் துரத்தச் செய்து மேற்படி புலிக்கூட்டங்களைக் கொன்றதுமன்றி மேற்படி சக்தியையும் அழித்து மனிதர்க்கும் பசுக்களுக்கும் நன்மையைத் தந்தருளினர். எல்லாச் செல்வமும் உண்டாம் என்பதே இதன் பயன். போகிப்பண்டிகை காரணச்சிறப்பாக நடந்துவர வேண்டியது.

தைப்பிறப்பாற்றல் முற்றிற்று.

கஉ. திங்கட்பூசை

ஐப்பசித் திங்கள் பூரணமி சாயுங்காலம் சிவன்கோயில் தோறும் சோற்று முழுக்கு (அன்னபிடேகம்) நடக்கின்றது. மார்கழித்திங்கள் முதல் கார்த்திகைத் திங்கள் வரையில் திங்கள் தோறும் வருகிற நிறையுவாவில் நெய் முதலாக ஒவ்வொரு பொருளால் முழுக்குச் செய்தலுக்குத் திங்கட் பூசை என்று பெயர். மார்கழித் திங்கள் தேவர்களுக்கு விடியற்காலம் ஆகையால் அது முதலாகச் சொல்லப்பட்டது.

சகலாகமசங்கிரகத்துள் சிதம்பர ரகசியம், சிவலிங்க மூர்த்திக்குச் செய்கிற திங்கட்பூசை விளக்கம், முழுக்கு, ஆடை, அணி, மலர், படைப்பு முதலியவைகள் சொல்லப்படுகின்றன.

மார்கழித்திங்கள் நிறையுவாவில் நெய் முழுக்கு, பொற்சரிகை யாடை, நூறுபொன்மணி மாலை அணி,

தும்பை மலர், பச்சைப்பயற்றுப் பொங்கல் படைப்பு—இதன் பயன் வீடுபேறு.

தைத்திங்கள் நிறையுவாவில் தேன் முழுக்கு, வெள்ளிச்சரிகை யாடை, நூறுவெள்ளி மணிமாலை அணி, நந்தியாவர்த்த மாலை, பாற்பொங்கல் படைப்பு—பயன் ஆயுள் நீட்சி.

மாசித் திங்கள் நிறையுவாவில் நெய்யில் தோய்த்த வெண் கம்பளம், வெண் பட்டாடை, நூறுபடிக மணிமாலை அணி, செந்தாமரைப்பூ, சருக்கரைப் பொங்கற் படைப்பு—பயன் உடல்நலம்.

பங்குனித் திங்கள் நிறையுவாவில் தயிர் பூசுதல், மஞ்சள் பட்டாடை, நூறு வச்சிர மணிமாலை அணி, மகிழம்பூ, பிட்டு படைப்பு—பயன் செல்வம்.

வைகாசித் திங்கள் நிறையுவாவில் சந்தனம் பூசுதல், மகிழம்பூநிறப் பட்டாடை, நூறு பதுமராகமணி மாலை அணி, கடப்பம்பூ, எட்சோறு படைப்பு—பயன் சிவன் உலகிருத்தல்.

ஆனித் திங்கள் நிறையுவாவில் முப்பழம் முதலிய பழங்கள் சாத்துதல், பச்சைப் பட்டாடை, நூறு மாணிக்க மாலை அணி, பாதிரிப்பூ, மஞ்சட்பொடி கலந்து சோறு படைப்பு—பயன் எண்ணியவை கைகூடல்.

ஆடித் திங்கள் நிறையுவாவில் திரட்டுப்பால் பூசுதல், கருப்புப் பட்டாடை, நூறு முத்துமணி மாலை அணி, கரிய ஊமத்தம்பூ, மூங்கில் அரிசி பாயாசம் படைப்பு—பயன் பகை அழிதல்.

ஆவணித் திங்கள் நிறையுவாவில் சர்க்கரை தரித்தல், மாதுளம்பூ பட்டாடை, நூறு பவளமணி மாலை அணி, மல்லிகைப்பூ, கோதும்பை பாயாசம் படைப்பு—பயன் இம்மை விருப்பம் எய்தல்.

புரட்டாசித் திங்கள் நிறையுவாவில் அதிரசம், வடை சியம் முதலியவை தரித்தல், ஊதா சிவப்புப் பட்டாடை,

நூறு புட்பராகமணி யணி, மிளகுச்சோறு படைப்பு—பயன் பொருள் அடைதல்.

ஐப்பசித் திங்கள் நிறையுவாவில் சோறு சாத்தல், பொற் கொன்றைப்பூநிறப் பட்டாடை, நூறு வைடூரிய மணிமாலை அணி, கத்திரிப்பூ, பழவகை சேர்ந்த பொங்கல் படைப்பு—பயன் நாற்பொருள் அடைதல்.

கார்த்திகைத் திங்கள் நிறையுவாவில் விளக்குக்காட்சி சித்திரப் பட்டாடை, நூறு பச்சைமணி அணி, கருநெய் தற்பூ, நெய்ப்பொங்கல் படைப்பு—பயன் பிரம்மக்கொலை முதலியன நீங்கல்.

திங்கட்பூசை முற்றிற்று.

கரு. ஐந்தொழிற் பெருவிழா

சகலாகமசங்கிரகம் என்னும் ஆகமத்தில் விதித்திருக்கின்றது.

மார்கழித் திங்கள் முதல் கார்த்திகைத் திங்கள்வரைக்கும் பன்னிரண்டு திங்களும் பெருவிழா நடத்தத்தக்கது. அஃதாவது உத்தம திரயம், மத்திம திரயம், அதம திரயம் என மூவகையாக விதித்திருக்கின்றது. உத்தம திரயத்திற்கு நாட்கள் 17, 15, 13. மத்திம திரயத்திற்கு நாட்கள் 13, 11, 9. அதம திரயத்திற்கு நாட்கள் 7, 5, 3. உத்தம திரயத்திற்கும், மத்திம திரயத்திற்கும் கொடியேற்றுவிழா நடத்தவேண்டும். அதம திரயத்திற்குக் காப்புக்கட்டு மூலமாக நடத்தவேண்டியது. உத்தம திரயம் முதலியவைகளுக்கு ஏற்படுத்திய மூவகை நாட்களிலும் கொடியேற்றத்திற்கு எந்தநாள் குறிக்கப்படுகின்றதோ அந்த நாட்களின் முடிவுநாள் தீர்த்தப் பெருவிழா நடத்தவேண்டும். பிறைநாளிலாவது, நட்சத்திரத்திலாவது, திதியும் நட்சத்திரமும் கலந்த நாளிலாவது தீர்த்தப் பெருவிழா நடத்தவேண்டியது. அந்தத் திதியிலாவது அதற்கு முன்

ளாவது அதற்குப் பின்னாளாவது வருகிற நட்சத்திரத்திலும் என்று அறிக.

கடற்கரையோரத்திலுள்ள கோயிலுக்குத் திதியும், மலைப்பக்கத்திலுள்ளதற்கு நட்சத்திரமும், ஆற்றோரத்திலுள்ளதற்குத் திதியும், நட்சத்திரமும் ஆம்.

மாசித் திங்கள் வளர்பிறை ஆறும் நாளிலும், ஆனித் திங்கள் தேய்பிறை எட்டாம் நாளிலும், தீர்த்தப் பெரு விழா நடத்தலாம். மேல் எழுதிய இரண்டு திங்களின் திதியிலும், நட்சத்திரத்திலும் தீர்த்தம் நடத்தலாம். பதினேழுநாள் நடத்துகிற பெருவிழாவிற்குத் தேய்பிறையில் தொடக்கம் செய்க. மற்றவைகளுக்கு வளர்பிறையில் துவக்கம் செய்க. அன்றியும் மேல் எழுதிய தீர்த்தவிழா பன்னிரண்டு திங்களிலும் ஆசாரியனுடைய நட்சத்திரத்திலாவது, கிராம நட்சத்திரத்திலாவது, தர்ம கர்த்தாவின் நட்சத்திரத்திலாவது, அவர் விரும்பிய வேறு நட்சத்திரத்திலாவது நடத்தலாம். இவைகளுக்குள் தீர்த்த விழாவிற்கு ஒற்றுமையான பட்சத்திலாவது, திதியிலாவது, நட்சத்திரத்திலாவது விழா ஆரம்பிக்கப்படும்.

ஐந்தொழில் என்பவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல்.

அங்குரார்ப்பணம், திருக்கலியாணம், கொடியேற்றம், காப்புக்கட்டு இவை படைத்தல்.

வாகனவிழா, ஓமகருமம், பலியிடுதல், இவை காத்தல்.

சூரண விழா, தேரேற்றம், சாந்துவிழா இவை அழித்தல்.

மௌனவிழா மறைத்தல்.

சக்தி, யாத்திரை விழா, தீர்த்தவிழா இவை அருளல்.

ஐந்தொழிற் பெருவிழாவிற்கு ஏற்படுத்திய ஒன்பது பட்சத்து நாட்களில் ஒன்றாகிய பதினொரு நாள் நடத்த வேண்டிய விழாவின் யாக முதலான (ஊர்தியான) முறையின் வகை.

நாள்	காலை விழா	இராத்திரி விழா
1.	சிவிகை	சிங்கம்
2.	சூரிய விருத்தம்	சந்திர விருத்தம்
3.	அன்னப் பட்சி	பூதம்
4.	பாம்பு	கமலம்
5.	மயில்	காளை
6.	யானை	இராவணன்
7.	தேர்	யாளி
8.	புலி	குதிரை
9.	மஞ்சம்	கேடகம்
10.	பத்திர பீடம்	சிங்காதனம்
11.	— —	இந்திர விமானம்

மேல் எழுதிய காலங்களுக்கு வாகனமில்லாவிட்டால் காலா காலங்களுக்குச் சிவிகையின்மீது எழுந்தருளப் பண்ணவேண்டியது.

கசு. தெப்பவிழா

விஜயம் என்னும் ஆகமத்தில் விதித்திருக்கின்றது.

1. பரமசிவமானது சூரியமூர்த்திக்குப் போதித்தல்

500 கோடிப் பூமண்டலப் பரப்பிலுள்ள சிவன் கோவில்களில் அந்தந்தச் சிவன் கோவில்களையடுத்த ஏரிகளிலாவது, தடாகங்களிலாவது பரமசிவம் தெப்பவிழாக் கொண்டருளப் பண்ணவேண்டியது. அஃது அந்தந்தச் சிவன் கோவில்களில் பெருவிழாவிற்குக் கொடியேற்றிப் பின் இறக்கி முடிந்த மூன்று நாட்களுள் தெப்ப விழா நடத்துவது முதன்மையானது.

ஐந்துநாட்களுள் நடத்துவது இடைநிலையது. ஏழு நாளில் நடத்துவது கடைநிலையது. பதினைந்து நாட்களுள் நடத்துவது கடையிற் கடையது. இவ்வண்ணமாக நடத்துவதற்கு வாய்ப்பில்லையானால் சித்திரை முதல் பங்குனித்

திங்கள்வரைக்கும் எந்தத் திங்களிலாவது வருகின்ற நிறையுவாவில் நேரிடுகிற அந்தந்த நட்சத்திரங்களில் நடத்துவது சிறப்பு. அதற்குங் கூடாமற் போயின், அந்தந்தத் திங்கள் வளர்பிறை எட்டாம் நாளில் நடத்துவது இடைநிலையது.

தெப்பமானது முப்பத்திரண்டு முழச் சதுரத்திற்குச் சதுரமும் நான்கு முழ உயரமுமுள்ளதா யிருக்கவேண்டும்.

2. தெப்பத்தின் மரவிதி

அது நீரில் மிதக்கத்தக்க பலவிதமான உலர்ந்த மரங்களால் அணியணியாக ஒன்றோடொன்று இணைத்துப் பலமுள்ள கயிறுகளால் சமைக்க வேண்டியது. இதனைச் சமைக்கத்தக்கவர்கள் நான்கு வருணத்திலுமுள்ள சைவ சமய அன்பர்களாம்.

தெப்பத்திற் சமைக்க வேண்டிய விமானவிதி பதினாறு முழச் சதுரத்திற்குச் சதுரம் எண்பது முழ உயரமுள்ளதும் ஆம்.

3. விமானத்தூண் இலக்கணம்

இருபத்து நான்கு தூண்களும் அவற்றிற்கு வேண்டிய விட்டங்களும் ஆம். இந்த விமானம் சதுர்ப்பந்தல் போலவும் அதற்குமேல் இரண்டு அல்லது மூன்று தளம் விமானம் போலவும் சமைக்கவேண்டியது. இதன் தூண்களும் விட்டங்களும் தெப்பம் சமைத்த மரவகையோடொத்தவையாம். அந்த ஆத்தானத்தில் மரத்தினால் சிங்காதனம் கற்பிக்கவேண்டியது.

மேற்படி விமானத்து நான்கு வாயிலுக்கும் எட்டு வாயிற் காப்பாளர் வேறுவேறு வடிவமாகக் கற்பிக்க வேண்டியதும் அல்லாமல் மேற்படி விமானத்தைச் சூழச் சித்திர விசித்திர விநோதமான ஆண் வடிவங்களாலும் பெண் வடிவங்களாலும் பலவகைப் பறவைகளாலும் அலங்கரிக்க வேண்டியது.

இந்த வடிவங்கள் சமைக்க வேண்டிய முறைமையைத் திருவிளையாடல் நாடக சிற்ப நூல்களிற் காண்க. மேற்படி விமானத்தை நானாவிதமான சித்திரப் பட்டாடைகளாலும், ஐந்துநிறப் பட்டாடைகளாலும், கண்ணாடிகளாலும், சித்திர விசித்திர மலர்களாலும், வாழைத் தாறுகளாலும், பாக்குக் குலைகளாலும், வாழை மரங்களாலும், கமுகமரங்களாலும், வாழைப்பழச் சீப்புகளாலும், இளநீர்களாலும், கருப்பங்கழிகளாலும், குடைகளாலும், விசிறிகளாலும், சாமரைகளாலும், கொடிகளாலும், ஆலவட்டங்களாலும், தொங்கொளி வட்டத் தீபங்களாலும், நிலையொளி வட்டத் தீபங்களாலும், தூண்ஒளி வட்டத் தீபங்களாலும் அலங்கரிக்கவேண்டியது.

இந்த விழா சாயுங்காலம் இருபத்துநான்கு நாழிகை முதல் இராத்திரி ஏழரை நாழிகை வரைக்கும் நடத்த வேண்டியது.

இந்தத் தெப்பத்தையும் விமானத்தையும் அமைத்துத் தெப்பத்தில் சாமியை எழுந்தருளப்பண்ண வேண்டியது.

விழா நடத்துவதற்கு முன்னமே சாமி தெப்பத்தில் எழுந்தருளியவுடனே கொக்குகளைப் போலவும் மீன்களைப் போலவும் நெட்டிகளிற் செய்து நீரில்விட்டு வேடிக்கை நடத்திப் பின் விழா நடத்த வேண்டியது.

கரு. விழாக் கொண்டருள வேண்டிய ஐந்து திருவுருவங்கள்

பஞ்சம் அல்லது ஐந்து மூர்த்திகளாவன: அம்மை யப்ப பிள்ளை, அருளம்மையார், (சோமாஸ்கந்தர் தேவி யார்), பிள்ளையார், ஆறுமுகர், சண்டேசர் :—இந்த ஐந்து திருவுருக்களுக்கும் தெப்ப விழா நடத்துவது சிறந்தது. பிறைசூடியார்க்கு நடத்துவது இடைநிலையது. விநாயக மூர்த்திக்கு நடத்துவது கடையது. முருகருக்கு நடத்து வது கடையிற் கடையது.

ஏரியிலாவது தடாகத்திலாவது மூன்று, ஐந்து அல் லது ஏழு வலமாக விழா நடத்தவேண்டியது. வலம் வரும் பொழுது சாமிக்கு எட்டுச் சந்திகளிலும் தூப தீப முதலா னவைகளோடு சிறப்பு (உபசாரம்) நடத்த வேண்டியது.

இந்த வலமானவுடன் சாமியைத் தடாக மண்டபத் தில் எழுந்தருளச் செய்து இளநீர் நுகரப்பண்ணித் தூப தீப முதலான பதினாறு மரியாதையும் நடத்தி மேற்படி விமானத்தோடு கிராமத் திருவுலா வரச்செய்து கோயிலில் எழுந்தருளச் செய்து சாமிக்குக் கும்பபூசையோடு திரு முழுக்கு நடத்தித் தயிர்ச்சோற்றுத் திருப்பாவாடை படைப்பமைக்க வேண்டியது.

அன்று நண்பகல் சாமிக்குக் கோயிலில் திருமுழுக்கு முதலியவைகள் நடத்தி ஐந்துவகைச் சோறுகளுடனும் பணிகார வகைகளுடனும், பழவகைகளோடும் தாம்பூலத் தோடும் படைக்கவேண்டும்.

தடாகத்தைச்சுற்றி எட்டுத் திக்குகளிலும் குடைக ளாலும், கொடிகளாலும், ஆலவட்டங்களாலும், மாவிலைத் தோரணங்களாலும் மற்றச் சித்திர விசித்திர தோரணங்க ளாலும் அழகுபடுத்த வேண்டியதுமல்லாமல் தடாகத்தில் மாணிக்கப்பட்டையும் அடிக்கவேண்டியது.

தெப்பத்தில் சாமி சந்நிதிக்கு எதிரில் ஐந்து அர்ச்சக தேசிகரால் ஐங்தெழுத்து, ஆறெழுத்து, பாசுபதாத்திரம், மிருத்தஞ்செய, செப முதலானவைகளால் செபம் செபிக்கச் செய்விக்க வேண்டியது.

இந்தவிழா சாமிக்குச் சரலக்கினத்திலாவது உபயலக்கினத்திலாவது தொடங்கவேண்டியது. திரலக்கினத்தில் தொடங்கும்படி விதியில்லை. தெப்பத்தில் சாமிக்குப் பின்னால் நான்மறைகளையும், திருமுறைகளையும் பாராயணம் நடத்தவேண்டியது. தெப்பத்துக்குப் பதினெட்டு வாத்தியங்களையும் பதினெட்டு மக்களால் முழங்கச்செய்ய வேண்டியது. தெப்பத்துக்குத் தெற்கில் வீணகானம் நடத்தவேண்டியது. தெப்பத்துக்கு மேற்கில் சங்கமுழக்கம் செய்யவேண்டும். தெப்பத்துக்கு வடக்கில் பதினறு உருத்திரகணிகையரால் கானம் நடத்த வேண்டியது. தடாகத்து வெளியில் பெரிய பேரிகை முழக்கம் செய்ய வேண்டும். தெப்பத்துக்குத் தென்கிழக்கு மூலையில் பொம்மை நாட்டியம் நடத்தவேண்டும். தெப்பவிழாவுக்குக் கோயிலைவிட்டுச் சாமி எழுந்தருளுங் காலத்தில் பத்துத் தான முதலியவைகள் நடத்தவேண்டும்.

தெப்பத்தில் சாமிக்கு நெருக்கமான மரியாதை பண்ணுகிற அன்பர்கள் பதினறுபேர்களுக்கு மேற்பட்டிருக்க விதியில்லை.

இந்த விழாவிற்குப் பிலவிழா, கோல்விழா, உடுப்ப விழா என்றும் பெயர். இவ்விழா பரமசிவத்திற்கு நடத்தும் அடியார்கள் நாற்பொருட் பேற்றையும் அடைவார்கள்.

பரமசிவன் இந்த விழாக்கொண்டருளுவதற்குக் காரணம் விஜயம் என்னும் ஆகமத்தில் விதித்திருக்கின்றது.

பரமசிவமானது பிபீலிகாதி பிர்மபரியந்தம் எண்பத்து நான்கு லக்கம் சீவவேறுபாடான ஆன்மாக்களை

முட்டை, வித்து, வேர்வை, கருப்பை ஆகிய நால்வகையில் எழுவகைத் தோற்றமாகப் படைத்து அவைகளில் நீர் வாழும் உயிர்களாகிய பத்துலக்கம் வேற்றுமையான உயிர்க் கோடிகளைக் காக்கும் பொருட்டுக் கொண்டருளிய விழா இது.

"உரைசேரும் எண்பத்து நான்குநூ
றாயிரமாம் யோனிபேதம்
நிரைசேரப் படைத்தவற்றின் உயிர்க்குயிராய்
அங்கங்கே நின்றான்கோயில்
வரைசேரும் முகில்முழவ மயில்கள்பல
நடமாட வண்டுபாட
விரைசேர்பொன் இதழிதர மென்காந்தள்
கையேற்கும் மிழலையாமே."

—சம்பந்தர்.

"ஊர்வ பதினொன்றும் ஒன்பது மானிடர்
நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாம்—சீரிய
பந்தமாம் தேவர் பதினு லயன்வகுத்த
அந்தமில்சீர்த் தாவரம்நால் ஐந்து."

என்ற வெண்பா எழுவகைத் தோற்றத்தையும் தொகையையும் குறிப்பதாம்.

சைவசமய நோன்பு விளக்கம்

முற்றும்

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த
நூற்பதிப்புக் கழக

வெளியீடுகள்

சைவசமய வளர்ச்சிக்குரிய வெளியீடுகள்

திருவிளக்கு வழிபாடு	விலை	அணா	1
திருக்கோவில் வழிபாடு	,,	,,	1
சிவதீக்கை	,,	,,	1
திருநீறும் சிவமணியும்	,,	,,	1
திருவைந்தெழுத்து	,,	,,	1
வழிபாட்டுக்குரிய தேவாரத்திரட்டு	,,	,,	1
வழிபாட்டுக்குரிய பிரபந்தத்திரட்டு	,,	,,	1

இவ்வேழுக்கும் மொத்த விலை அணா 6
ஒவ்வொன்றிலும் 12 படிகட்கு அணா 9

சமயத்தொண்டு செய்யவேண்டும் என்ற அன்பர்கள் மேற்கண்ட நூல்களை நூற்றுக் கணக்கில் வாங்கிப் பரப்பிப் புகழ் புண்ணியங்களைப் பெறுவார்களாக!

சைவசமய வளர்ச்சி நூற்றிரட்டு (*முதற் புத்தகம்*)
மேற்கண்ட முதல் 6 ஓரணா வெளியீடுகள் அடங்கியது. கண்கவர்ச்சியுடைய அழுத்தமான கட்டடம் — *விலை அணா* 12

பள்ளிக்கூட வழிபாடு	விலை	அணா	1
திருவாசகத் திருவகவல் *நான்கு அகவல்களும் அடங்கியது*	,,	,,	$1\frac{1}{2}$
பூப்பிள்ளை அட்டவணை	,,	,,	3
கழகச் சைவ வினாவிடை (*முதற் புத்தகம்*)		,,	3

கழக வெளியீடு: எஉக

பதிப்பாளர்:
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1.

தலைமை நிலையம்:
24, கீழைத் தேர்த்தெரு, திருநெல்வேலி.

விலை அணா 6.

அப்பர் அச்சகம், சென்னை-1—O. 6200.